**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம் - 2000-2001ஆம் ஆண்டு பகுதி 2 திட்டம் - மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள 20 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளுக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் மின்வசதி செய்து கொடுக்க ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

அரசாணை (நிலை) எண் .41 நாள்:25.5.2000
படிக்கப்பட்டது:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநரின் கடிதம் எண்.பி2 /305/2000 நாள் 17.4.2000

ஆணை:

மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் சீர்மரபினர் கல்வி மேம்பாட்டிற்கென 265 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இப்பள்ளிக்கட்டிடங்கள் நாற்பதாண்டு காலம் பழமை வாய்ந்தவையாகும். அந்நாட்களில், அடிப்படை வசதியை கருத்திற் கொள்ளாது கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. பெரும்பான்மையான பள்ளிகளில் மின்இணைப்பு வசதி கிடையாது. மொத்தம் 265 பள்ளிகளில் இதுவரை 40 பள்ளிகளுக்கு மட்டுமே மின் இணைப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 2000-2001ஆம் பகுதி 2 திட்டத்தின் கீழ், ரூ.5.00 இலட்சம் செலவில் மேலும் 20 பள்ளிகளுக்கு மின் இணைப்பு செய்து கொடுக்க மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

2.இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்றுக்கொண்டு மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் அமையப்பெற்றுள்ள, இவ்வரசாணையின் இணைப்பில் விவரித்துள்ள 20 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளுக்கு 2000-2001ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் ரூ.5.00 இலட்சம் செலவில் மின் இணைப்பு வசதி செய்து கொடுக்க அரசு உத்திரவிடுகிறது.

3. மேலே பத்தி 2ல் அனுமதிக்கப்பட்டுள்ள செலவினத்தை "4225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதனச் செலவு - 03 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் - 277 கல்வி ஒன்பதாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் - மிமி மாநிலத் திட்டம் யிஹி கட்டிடங்கள் - 16 பெரும்பணிகள் (த.தொ.கு எண். 4225 03 277 யிஹி 1601)

4.இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.34094/சந/2000 நாள் 3.5.2000 ன்படி இசைவு பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந.முருகன்,
அரசு செயலாளர்

பெறுநர்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை 600 005.
மாவட்ட ஆட்சியர், மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்.
தனித்துணை ஆட்சியர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
மாநிலக் கணக்காயர், சென்னை-18
மாநிலக் கணக்காயர், சென்னை-35
மாநிலக் கணக்காயர், சென்னை-6
(பெயருடன் கூடிய உறையில்)
மாவட்டக் கருவூல அதிகாரி, திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள்.

நகல்:

பிற்பட்டோர் நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**இணைப்பு**

2000-2001 பகுதி-2 திட்டத்தின் கீழ் மின் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டிய பள்ளிகளின் விவரம்:-

| வ.எண் | பள்ளியின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி,முத்துப்பட்டி | மதுரை |
| 2. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, கண்ணனூர் | மதுரை |
| 3. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, கருமாத்தூர் | மதுரை |
| 4. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, பசுக்காரன்பட்டி | மதுரை |
| 5. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, மேலக்கூடலூர் | தேனி |
| 6. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, அப்பிப்பட்டி | தேனி |
| 7. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி,உ.அம்மாபட்டி | தேனி |
| 8. | அரசு கள்ளர் ஆரம்பப் பள்ளி, ஓடைப்பட்டி | தேனி |
| 9. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, முத்தணம்பட்டி | தேனி |
| 10. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி வாழையாத்துப்பட்டி | தேனி |
| 11. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, சில்வார்பட்டி | தேனி |
| 12. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி, டி.சிலுக்குவார்பட்டி | தேனி |
| 13. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி, சித்தர்கள் நத்தம் | திண்டுக்கல் |
| 14. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி,முசுவனூத்து | திண்டுக்கல் |
| 15. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி,இராமநாஜபுரம் | திண்டுக்கல் |
| 16. | அரசு கள்ளர் நடுநிலைப்பள்ளி, தெப்பத்துப்பட்டி | திண்டுக்கல் |
| 17. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி,கிருஷ்ணாபுரம் | திண்டுக்கல் |
| 18. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி,ஜெ.மெட்டூர் | திண்டுக்கல் |
| 19. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி,சொக்கலிங்கபுரம் | திண்டுக்கல் |
| 20. | அரசு கள்ளர் ஆரம்பப்பள்ளி,கருத்தாண்டிபட்டி | திண்டுக்கல் |

/உண்மை நகல்/